ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2096/47 - 2018 නොවැම්බර් මස 07 වැනි බදාදා - 2018.11.07

*2096/47 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DEV/LND/02/ACQUI/04 - 27.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல.: 4-3/15/2017/VE/113.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள், என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில், நாஒட்டுன்ன கிராம அலுவலர் பிரிவில், நாஒட்டுன்ன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட මාර : 2742 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.7669 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டு:

***01. துண்டு இல. 1***

காணியின் பெயர்: பறகஹதெனியே வத்த, ஹெட்டிகமகெ வத்த, பறகஹஹேன வத்த, ஹெட்டிகமகெ ஹேன, பறகஹதெனியே ஹேன ; விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கை காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: ஆறுமுகம் இராசலிங்கம் மற்றும் விஜேசேக்கர அஜித்சந்திர அபேகுணவர்தன; விஸ்தீரணம்: 0.7669 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018.12.26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தெவிநுவர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018.12.12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ரஞ்சித் யாப்பா,  
பிரதேச செயலாளர்,  
தெவிநுவர.

பிரதேச செயலகம்,  
தெவிநுவர,  
*2018, நவெம்பர் 02.*

*11 - 903*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: மது/இஅ/4/29.
காணி அமைச்சின் இல.: LD/5/2001/VEP/234.

2018, ஏப்பிறல் மாதம் 11 ஆந்திகதிய 2066/39 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியில் எடுத்துக் கொண்ட காணியின் துண்டு இலக்கம் 1 இற்குப் பதிலாக துண்டு இலக்கம் 2 மற்றும் 3 என்பதாக திருத்தப்பட வேண்டுமென்பதாக அறியத் தருகின்றேன்:

**துண்டு இல. 2**

காணியின் பெயர்: அபேதென்ன தோட்டம் ; விபரம்: திறந்த கைவிடப்பட்ட நிலம் ; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணிச் சீர்திருத்த ஆணைக் குழு; விஸ்தீரணம் : 1.7972 ஹெக்டயார்.

**துண்டு இல. 3**

காணியின் பெயர்: கரம்பேதர ; விபரம்: திறந்த கைவிடப்பட்ட நிலம் ; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணிச் சீர்திருத்த ஆணைக் குழு; விஸ்தீரணம் : 0.2310 ஹெக்டயார்.

சியாமா பீ. காரியவசம்,
பிரதேச செயலாளர்,
மதுகம.

பிரதேச செயலகம்,
மதுகம,
2018, ஒற்றோபர் 24.

11 - 904